Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900



E-Mail: collegehouse_mdu@yahoo.co.in
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 85 | உள்ளூர் - 26.03.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 85 | வெளியூர் - 27.03.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**பாபா அணு ஆராய்ச்சி -105 காலியிடங்கள்!**

**கஜகேசரி யோகம்..! இந்த ராசிக்காரர்களை தடுக்க முடியாது..!**

**உதயமாகிறது 'புதிய கட்சி' டாக்டர் ராமதாஸ்!**

**அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

## டிரம்ப் வெறும் மிரட்டல் விடுப்பவர் மட்டுமல்ல - ஈரானுக்கு வெள்ளை மாளிகை எச்சரிக்கை!

அமெரிக்கா, மார்ச். 26–

அணுசக்தி திட்டத்தை ஈரான் கைவிட வேண்டும் என்றும் அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதுதொடர்பாக இரு நாடுகள் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத நிலையில் கடந்த 28–ந்தேதி ஈரான் மீது அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து போர் தொடுத்தன. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி



வருகிறது.

மேலும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதனால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு கச்சா எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஈரானுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடந்து வருவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார். மேலும் மத்தியஸ்தர்கள் மூலம் அமெரிக்காவிடம் இருந்து சில முன்மொழிவுகள் வந்துள்ளதாக ஈரான் தரப்பு தெரிவித்தது.

இந்நிலையில், அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்தியில், ''ஈரானின் மின் கட்டமைப்புகளை தாக்காமல், 3 நாட்களாக அமெரிக்கா ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறது. ஆனால், தற்போதைய சூழலின் எதார்த்தத்தை ஏற்கத் தவறினால், இதுவரை இல்லாத மிகக் கடுமையாகத் தாக்குதலுக்கு ஈரான் உள்ளாக நேரிடும். ட்ரம்ப் வெறும் மிரட்டல் விடுப்பவர் மட்டுமல்ல'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

## போரை முடிவுக்கு கொண்டுவர
# ட்ரம்ப் 15 அம்ச திட்டம் ஈரான் ஏற்க மறுத்து
## கடும் நிபந்தனைகள் விதிப்பு!!

வாஷிங்டன், மார்ச் 26–

ஈரானுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 15 அம்ச திட்டத்தை வெளியிட்டுள்ளார். அவற்றை ஏற்க மறுத்த ஈரான், பதிலுக்கு 5 கடுமையான நிபந்தனைகளை வெளியிட்டுள்ளது.



இதற்கிடையில், அமெரிக்கா – ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சி பாகிஸ்தானில் நடைபெறுகிறது. பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீர் இதில் மத்தியஸ்தராக ஈடுபட்டுள்ளார் என்றும் தகவல் வெளியானது. ஈரானின் ஏவுகணை மற்றும் அணு ஆயுதத் திட்டத்தை முடக்கும் முயற்சியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளது. ஆனாலும், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல் நடத்துகிறது. ஹார்முஸ் ஜலசந்தி ஈரான் கட்டுப்பாட்டில் உள்ளதால், அங்கு கச்சா எண்ணெய் போக்குவரத்து குறைந்து சர்வதேச சந்தையில் அதன் விலை உயர்ந்துள்ளது. இதனால் ஈரான் போரை முடிவுக்கு கொண்டுவர 15 நிபந்தனைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

அதன் விவரம்:

>அமெரிக்கா – ஈரான் இடையே ஒப்பந்தம் பற்றி பேச ஒரு மாத காலத்துக்கு போர் நிறுத்தம்.

>ஈரான் அணு ஆயுதத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

>யுரேனியம் செறிவூட்டுவதை நிறுத்த வேண்டும்.

>ஹார்முஸ் ஜலசந்தி திறந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

>இருப்பில் உள்ள யுரேனியத்தை சர்வதேச அணுசக்தி முகமையிடம்(ஐஏஇஏ) ஈரான் ஒப்படைக்க வேண்டும்.

>ஈரானின் நடான்ஸ், இஸ்ஃபஹன் மற்றும் ஃபோர்டோ ஆகிய பகுதிகளில் உள்ள அணு ஆயுத உற்பத்தி மையங்களை மூடி, ஐஏஇஏ ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

>அண்டை நாடுகளில் உள்ள தீவிரவாத குழுக்களுக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும்.

> ஏவுகணைகளின் எண்ணிக்கை மற்றும் இலக்கு தூரங்களுக்கு வரம்பு நிர்ணயிக்க வேண்டும்.

>எதிர்காலத்தில் தற்காப்புக்கு மட்டுமே ஏவுகணைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த நிபந்தனைகளுக்கு ஈரான் ஒப்புக் கொண்டால், ஈரான் மீதான தடை முழுவதுமாக நீக்கப்படும், அணு மின்சக்தி தயாரிப்புக்கு தேவையான உதவி செய்யப்படும். இவ்வாறு அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இதுகுறித்து ஈரான் ராணுவ தலைமையகச் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் இப்ராகிம் கூறுகையில், ''ஒப்பந்தம் என்ற பெயரில் தோல்வியை மறைக்க அதிபர் ட்ரம்ப் முயற்சிக்கிறார். அவருடைய வெற்று வாக்குறுதிகள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன. அதிபர் ட்ரம்ப் அவருக்குள்ளேயே பேச்சுவார்த்தை நடத்துகிறார்'' என்றார்.

மற்றொரு செய்தி தொடர்பாளர் மேஜர் ஜெனரல் அலி அப்துல் லாஹி அலியாபாடி கூறுகையில், ''முழு வெற்றி பெறும் வரை இந்த போர் தொடரும்" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதேவேளையில், போரை முடிவுக்கு கொண்டு வர ஈரான் 5 முக்கியமான நிபந்தனைகளை விதித்துள்ளது. அவற்றின் விவரம்.

>அமெரிக்கா – ஈரான் இடையே போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

>ஈரான் மீது எதிர்காலத்தில் அமெரிக்கா தாக்குதல் நடத்தாது என்பதற்கு சர்வதேச உறுதிமொழி தரவேண்டும்.

>வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை அகற்ற வேண்டும். அமெரிக்கா இழப்பீடு வழங்க வேண்டும்.

>ஹார்முஸ் ஜலசந்தி மீது ஈரானுக்கு முழுமையான கட்டுப்பாடு வேண்டும்.

>ஈரான் ஏவுகணை திட்டங்களில் எந்தவித கட்டுப்பாடோ, பேச்சுவார்த்தையோ கூடாது. இவ்வாறு ஈரான் நிபந்தனை விதித்துள்ளது.

போரை நிறுத்துவதற்கு அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ள 15 அம்ச திட்டம் குறித்து பாகிஸ்தானில் ஈரானுடன் இந்த வார இறுதியில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை வெள்ளை மாளிகை செய்து வருகிறது. எனினும் ஈரான் மீதான தாக்குதல் தொடர்கிறது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் குடியிருப்புப் பகுதியில் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானிய செம்பிறை சங்கம் கூறியுள்ளது. பதிலுக்கு சவுதி, பஹ்ரைன், குவைத் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள எரிபொருள் கிடங்கு மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. அதிபர் ட்ரம்ப் அடுத்தடுத்து தனது கருத்துகளை மாற்றி மாற்றி பேசி வருகிறார். அனைத்தையும் ஈரான் மறுத்து வருவதால் மேற்கு ஆசியா பகுதியில் நடைபெறும் போர் நிற்பதற்கான அறிகுறிகள் எதுவும் தற்போதைக்கு தெரியவில்லை என்று சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர்.

## நொய்டாவில் புதிய சர்வதேச விமான நிலையத்தை 28-ம் தேதி திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி!

புதுடெல்லி, மார்ச். 26–

தேசிய தலைநகர் பிராந்தியத்திற்கான ஒரு முக்கிய சர்வதேச நுழைவாயிலாக கருதப்படும் புதிதாகக் கட்டப்பட்ட நொய்டா சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி வரும் 28–ம் தேதி (சனிக்கிழமை) திறந்து வைக்கிறார்.



டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு துணையாகச் செயல்படும் வகையில், டெல்லி – என் சி ஆர் பிராந்தியத்திற்கான இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக நொய்டா விமான நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியா ஒரு உலகளாவிய விமானப் போக்குவரத்து மையமாக உருவெடுக்கும் பயணத்தில், இந்த திறப்பு விழா ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைகிறது என்று மத்திய அரசின் அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

பிரதமர் நரேந்திர மோடி மார்ச்–28, அன்று உத்தரப் பிரதேசத்திற்கு வருகை தரவுள்ளார். காலை சுமார்–11.30 மணியளவில், கவுதம புத்த நகர் மாவட்டத்திலுள்ள ஜேவார் பகுதியில் அமைந்துள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முனையக் கட்டிடத்தை அவர் பார்வையிடுவார். அதைத் தொடர்ந்து நண்பகல் சுமார்–12 மணியளவில், பிரதமர் நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் முதல் கட்டத்தை திறந்து வைத்து, அந்த நிகழ்வில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

இந்தியாவிலேயே செயல்படுத்தப்படும் மிகப்பெரிய 'கிரீன்பீல்ட்' புதியதாக உருவாக்கப்படும் விமான நிலையத் திட்டங்களில் நொய்டா விமான நிலையமும் ஒன்றாகும். டெல்லி மற்றும் நொய்டா விமான நிலையங்கள் இணைந்து ஒரு ஒருங்கிணைந்த விமான போக்குவரத்து அமைப்பாகச் செயல்படும். இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் குறையும், பயணிகளைக் கையாளும் திறன் விரிவடையும், மேலும் டெல்லி – என் சி ஆர் பிராந்தியம் உலகின் முன்னணி விமானப் போக்குவரத்து மையங்களில் ஒன்றாகத் திகழும்.

யமுனா விரைவுச்சாலையின் ஓரத்தில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள நொய்டா சர்வதேச விமான நிலையம், சாலை, ரெயில், மெட்ரோ மற்றும் பிராந்தியப் போக்குவரத்து அமைப்புகளுடன் தடையற்ற ஒருங்கிணைப்புடன் ஒரு பல்முனைப் போக்குவரத்து மையமாக திட்டமிடப்பட்டுள்ளது. இது பயணிகள் மற்றும் சரக்குகளுக்குத் திறமையான இணைப்பை உறுதி செய்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏப். 2 முதல் மு.க.ஸ்டாலின் சூறாவளி சுற்றுப்பயணம்!

சென்னை, மார்ச். 26–

தமிழக சட்டசபைக்கான தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23–ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுதாக்கல் வருகிற 30–ந்தேதி தொடங்குகிறது.



இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்வது என்ற இலக்கை முன் வைத்து தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். இதற்காக 22 கட்சிகளை ஒருங்கிணைத்து 'மெகா' கூட்டணியை உருவாக்கி உள்ளார்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28, தே.மு.தி.க.–10, விடுதலை சிறுத்தைகள்–8, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு–5, இந்திய கம்யூனிஸ்டு–5, ம.தி.மு.க.–4, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளுக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும் எஸ்.டி.பி.ஐ., மனிதநேய ஜனநாயக கட்சி, முக்குலத்தோர் புலிப்படை ஆகியவற்றுக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

கூட்டணி கட்சிகளுக்குள் உடன்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அந்த கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகளை ஒதுக்குவது என்பது பற்றி ஆலோசனைகள் நடைபெற்று வருகிறது. இதில் தி.மு.க. எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது கூட்டணி கட்சிகளுக்கு எந்த தொகுதிகளை கொடுப்பது என்ற பட்டியல் நாளைக்குள் முடிவு செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிறகு சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை தி.மு.க. வேட்பாளர் பட்டியல் மற்றும் தேர்தல் அறிக்கைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிடுவார் என தெரிகிறது.

அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு தி.மு.க. வேட்பாளர் பட்டியலையும் வெளியிடுவார் என தெரிகிறது.

இதன் பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மாவட்டம் மாவட்டமாக சென்று பிரசாரம் செய்ய இருக்கிறார்.

அதன் பிறகு 2–ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவாரூரில் தேர்தல் பிரசாரத்தை தொடங்குகிறார்.

இதற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி சென்று அங்கிருந்து திருவாரூர் செல்கிறார். திருவாரூரில் திறந்த வேனில் சென்று மக்களை சந்திக்கிறார். அங்கு நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி பேசுகிறார்.

இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரசாரம், சுற்றுப் பயண விவரம் தயாரிக்கப்பட்டு உள்ளது.

இதே போல் தி.மு.க. இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்ய இருக்கிறார். அவரது பிரசார சுற்றுப் பயண திட்டமும் தயாராகி வருகிறது.

## 'தமிழகத்தில் 4 நாட்கள் விடுமுறை....' - ட்விஸ்ட் கொடுத்த தேர்தல் ஆணையம்!




சென்னை, மார்ச். 26–

பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பின்படி மார்ச் 30 ஆம் தேதி தொடங்கும் வேட்புமனு தாக்கல், ஏப்ரல் 6ஆம் தேதியுடன் நிறைவு பெறவுள்ளது.

தேர்தல் ஆணையம் ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதாவது மார்ச் 30ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 6ஆம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இடையில் மார்ச் 31 (செவ்வாய்), ஏப்ரல் 1 (புதன்), ஏப்ரல் 3 (வெள்ளி), ஏப்ரல் 5 (ஞாயிறு) ஆகிய 4 நாட்கள் விடுமுறை அளிக்கப்படுகிறது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் வேட்புமனு தாக்கலுக்கு 4 நாட்கள் மட்டுமே அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், அரசியல் கட்சிகள் தீவிரமாக வேட்பாளர் பட்டியலை தயார் செய்து வருகின்றன.

## விஜய் பிரசாரத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக போலீசார் தீவிர ஆலோசனை!



சென்னை, மார்ச். 26–

சென்னை பெரம்பூரில் மார்ச். 28–ல் மறுநாள் தேர்தல் பிரசாரத்தை விஜய் தொடங்க திட்டமிட்டுள்ளார். சென்னை பெரம்பூர் எம்.கேபி நகரில் தொடங்கி கொளத்தூர், வில்லிவாக்கம், அண்ணா நகர்,விருகம்பாக்கம் ஆகிய 5 தொகுதிகளில் விஜய் பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளார். வேனில் இருந்த படி விஜய் பிரசாரத்தில் ஈடுபட இருப்பதாக தகவல் வெளியானது.

பிரசாரத்தை தொடங்க இருக்கும் விஜய்க்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்குவது என்பது தொடர்பாக போலீசார் ஆலோசனை மேற்கொண்டுள்ளனர். விஜய் பிரசாரம் செய்ய உள்ள இடங்களில் 3 ஆயிரம் பேர் கூடுவார்கள் என்று கூறி தவெக சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும், ஆனால் விஜய்யை பார்க்க கட்டுக்கடங்காமல் கூட்டம் வந்தால் அதை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்ட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. இதனால் விஜய் பிரசாரத்திற்கு அனுமதி கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு தவெகவினர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 26.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 12-ம் தேதி

# ChatGPT-யிடம் இந்த விஷயங்களை தவறுதலாகக்கூட கேட்காதீங்க..!




செயற்கை நுண்ணறிவு, AI தற்போது இளைஞர்களின் வாழ்வில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. அலுவலகத்தில் மேலாளருடன் சண்டை ஏற்பட்டாலும், சம்பள உயர்வு கேட்க வழியில்லை என்றாலும், அல்லது தனிப்பட்ட உறவுகளில் பிரச்சனைகள் இருந்தாலும், பலர் உடனடியாக 'ChatGPTஐ நாடுகின்றனர். இந்த ஏஐ சாட்பாட் (AI chatbot) விரைவாகப் பிரபலமடைந்து, ஒரு நாளைக்கு மில்லியன் கணக்கான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. மதிப்பீடுகளின்படி, இது ஒரு நாளைக்கு சுமார் 250 கோடி கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. இருப்பினும், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயனுள்ள வகையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிவதோடு, அதன் வரம்புகளையும் அறிவது முக்கியம். எனவே, சாட் ஜிபிடி–யைப் பயன்படுத்துவதற்கு முன்பு என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பார்ப்போம்.

**தனிப்பட்ட விவரங்கள்**

தனிப்பட்ட மற்றும் ரகசியத் தகவல்களைப் பொறுத்தவரை பயனர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் வங்கிக் கணக்கு விவரங்கள், கடவுச்சொற்கள், ஆதார் அல்லது பான் போன்ற அடையாளத் தரவுகள் மற்றும் ரகசிய அலுவலக ஆவணங்களை ஒரு சாட்பாட்டில் தட்டச்சு செய்யக்கூடாது. இந்த விவரங்களை நீங்கள் பகிர்ந்தவுடன், அவை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்காது. எனவே, உங்களின் மிகவும் தனிப்பட்ட தகவல்களை டிஜிட்டல் தளங்களில் வைப்பதற்கு முன்பு இருமுறை சிந்திப்பது நல்லது.

**உடல்நல பிரச்சனைகள்**

மேலும், உடல்நலம் தொடர்பான விஷயங்களுக்கு சாட்பாட்களை முழுமையாகச் சார்ந்திருப்பது ஆபத்தானது. சிலர் இதை உடல் ரீதியான பிரச்சனைகளுக்கு மட்டுமல்லாமல், மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வுக்காகவும் பயன்படுத்துகிறார்கள். இது நல்லதல்ல.

இருப்பினும், இது ஒரு தொழில்முறை மருத்துவர் அல்லது சிகிச்சையாளருக்கு மாற்றாகாது. இது பொதுவான தகவல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், சிகிச்சை அல்லது மருந்து சம்பந்தமாக நீங்கள் எப்போதும் ஒரு தகுதிவாய்ந்த மருத்துவரை அணுக வேண்டும். சட்டவிரோதமான அல்லது ஆபத்தான தலைப்புகளைத் தேடுவதும் ஒரு பெரிய ஆபத்து. வெடிகுண்டு தயாரித்தல், ஹேக்கிங் நுட்பங்கள் மற்றும் குற்றங்களிலிருந்து தப்பித்தல் போன்ற தலைப்புகளில் தகவல்களைத் தேடுவது தவறு மட்டுமல்ல, அது உங்களைச் சந்தேகத்திற்குரியவராகவும் காட்டக்கூடும். இதுபோன்ற கேள்விகள் தொழில்நுட்ப நிறுவனங்களால் கவனிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, வேடிக்கைக்காக இருந்தாலும் கூட, இதுபோன்ற தலைப்புகளைத் தேடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கண்மூடித்தனமாக நம்பாதீர்கள்**

மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், Chat GPT வழங்கும் ஒவ்வொரு தகவலும் உண்மை என்று கருதுவதும் தவறாகும். சில சமயங்களில், அது தவறான அல்லது முழுமையற்ற தகவல்களை வழங்கக்கூடும். குறிப்பாக, அது சதி கோட்பாடுகள் மற்றும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளை உண்மையெனக் காட்டக்கூடும். எனவே, எதையும் நம்புவதற்கு முன்பு மற்ற நம்பகமான ஆதாரங்களுடன் சரிபார்ப்பது மிகவும் முக்கியம்.

**தனிப்பட்ட முடிவுகள்**

மிக முக்கியமாக, வாழ்க்கையின் முக்கிய முடிவுகளைச் செயற்கை நுண்ணறிவிடம் விட்டுவிடுவது ஆபத்தானது. வேலையை மாற்றுவதா, திருமணம் செய்துகொள்வதா, உறவுகளைத் தொடர்வதா அல்லது முறித்துக்கொள்வதா போன்ற விஷயங்கள் முற்றிலும் தனிப்பட்டவை. அவை உணர்ச்சிகள், அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு சாட்பாட் வழங்கும் பதில்கள் உங்களுக்குப் பரிச்சயமானதாகத் தோன்றலாம், ஆனால் அவை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்குப் பொருத்தமானதாக இல்லாமல் இருக்கலாம்.


**தொழில்நுட்பத்தைச் சார்ந்திருத்தல்**

தொழில்நுட்பம் நமது முடிவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல, மாறாக நமது வாழ்க்கையை எளிதாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ChatGPT போன்ற கருவிகள் கவனமாகவும் விவேகமாகவும் பயன்படுத்தப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும், நமது இரகசியங்களைப் பாதுகாப்பது, சுகாதார விஷயங்களில் நிபுணர்களைக் கலந்தாலோசிப்பது, உண்மைகளை அறிந்துகொள்வது மற்றும் முக்கியமான முடிவுகளை நாமே எடுப்பது ஆகியவை முக்கியம். தொழில்நுட்பத்தை அதற்கு அடிமையாக்குவதை விட, ஒரு உதவியாளராக மாற்றுவதே விவேகமான முடிவாகும்.




சட்டமன்ற பொதுதேர்தல்–2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை மருத்துவகல்லூரி கலையரங்கத்தில் மண்டல அலுவலர்களுக்கான தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி வகுப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# ரூ.2 லட்சம் கோடியில் நிலவில் நிரந்தர ஆராய்ச்சி மையம்- 2030-க்குள் நாசா அமைக்கிறது!



வாஷிங்டன், மார்ச். 26–

அமெரிக்காவின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக நாசா உள்ளது. நிலவை குறிக்கோளாக கொண்டு அதன் லட்சிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் இந்தாண்டுக்குள் மனிதர்கள் நிலவுக்கு கொண்டு செல்லும் ஆர்கிமெடிஸ்–2 திட்டத்தை செயல்படுத்த தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

இதற்கான அனைத்து பணிகளும் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்தநிலையில் விண்கலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நிலவை சுற்றி விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்க நாசா திட்டமிட்டிருந்தது. தற்போது அந்த திட்டத்தை கைவிடுவதாக நாசா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதற்கு பதிலாக நிலவில் நாசாவுக்கான நிரந்தரமான ஆராய்ச்சி மையத்தை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக அரசு சார்பில் ரூ.1 லட்சத்து 86 ஆயிரம் கோடி (20 பில்லியன் டாலர்கள்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் 2030–க்குள் இதனை அமைக்கவுள்ளதாக அதன் தலைவர் ஜேரட் ஐசன்மேன் தெரிவித்தார்.

# அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமல்ல: சுப்ரீம் கோர்ட்!



புதுடெல்லி, மார்ச். 26–

மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட புதிய விதிமுறைகளில், அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்பாக வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் என்றும், அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. வந்தே மாதரம் பாடலை 1875–ம் ஆண்டு பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதினார். அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமல்ல, அது ஒரு நெறிமுறை அல்லது அறிவுறுத்தல் மட்டுமே என சுப்ரீம் கோர்ட் தெளிவுபடுத்தியுள்ளது. அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாட வேண்டும் என்ற மத்திய அரசின் வழிகாட்டுதலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட், அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது.

நீதிமன்றம் இந்த சுற்றறிக்கை ஒரு அறிவுறுத்தல் மட்டுமே என்றும், அதில் பாடலை கட்டாயமாக்கவில்லை என்றும் தெரிவித்தது. அதை பின்பற்றாதவர்களுக்கு எந்தவித தண்டனையும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியது.

# ஏப்ரல் 9 முதல் 29 வரை தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு வெளியிட தடை!

அசாம், மார்ச். 26–

அசாம் மாநிலத்தில் முதல் மந்திரி ஹிமந்த் பிஸ்வா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி நடந்து வருகிறது. மே 20–ம் தேதி அசாம் அரசின் பதவிக்காலம் நிறைவடைகிறது. மொத்தம் 126 தொகுதிகளைக் கொண்ட அசாம் சட்டசபை தேர்தல் குறித்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் சமீபத்தில் அறிவிப்பு வெளியிட்டது.

அதன்படி, அசாமில் ஏப்ரல் 9–ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என்றும், இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4–ம் தேதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு ஆளும் பா.ஜ.க., காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்பட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அங்கு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்நிலையில், ஏப்ரல் 9–ம் தேதி காலை 7 மணி முதல் ஏப்ரல் 29–ம் தேதி மாலை 6.30 மணி வரை தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்தவோ, பிரசுரிக்கவோ அல்லது அச்சு அல்லது மின்னணு ஊடகம் வழியே தகவல்களை வெளியிடவோ அல்லது வேறு எந்த வடிவிலோ அவற்றை வெளியிடுவதற்கு தடை விதிக்கப்படுகிறது என இந்திய தலைமை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# கவுன்சிலருக்கு பொதுமக்கள் பாராட்டு!



திருப்பூர், மார்ச். 26–

திருப்பூர் மாநகராட்சி16 வது வார்டு பிச்சம்பாளையம் புதூர் நால்ரோடு சந்திப்பில் மழைக்காலங்களில் சுமார் இரண்டு அடி தண்ணீர் தேங்கி நிற்கும் இதனால் அங்கேரிபாளையம் ஸ்ரீநகர் மற்றும் பிச்சம்பாளையம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வேலைக்கு செல்வது மற்றும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மழைக்காலங்களில் மிகுந்த அவதிப்பட்டு வந்தனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 15 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் மற்றும் தரை பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இதனால் அவ்வழியாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு மாற்று வழியில் பொதுமக்கள் சென்று வந்தனர் பணிகள் நிறைவடைந்த நிலையில் திறப்பு விழா காணாமல் அவ்வழிப்பாதை அடைக்கப்பட்டு இருந்த நிலையில் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது அதனை 16 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ் செல்வி கனகராஜ் முன் நின்று இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வழியாக செல்ல ஏதுவாக பணிகளை மேற்கொண்டார் இதனால் பிச்சம் பாளையம் ஸ்ரீ நகர் அங்கேரிபாளையம் செல்லும் பாதையான நால் ரோட்டில் தரைப்பாலம் கட்டி பயன்பாட்டுக்கு வந்ததை பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர் மேலும் கடந்த 25 ஆண்டு காலமாக மழைக்காலங்களில் தங்கள் பட்டு வந்த இன்னல்களில் இருந்து விடுபட்டதாகவும் தெரிவித்தனர்.

# வாடிப்பட்டி அருகே பாப்பம்மாள் நாச்சாரம்மாள் கோயில் கும்பாபிஷேகம்!



சோழவந்தான், மார்ச். 26–

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பஸ் நிலையம் அருகே நீரேத்தான் பாப்பம்மாள், நாச்சாரம்மாள் கோயில் கும்பாபிஷேகம் நடந்தது. முதல் நாள் மாலை 3 மணிக்கு பெரிய பூசாரி வீட்டில் இருந்து பெரிய பூசாரி அழைத்து வந்து கோவிலில் பெட்டி எடுத்து சாமியாடிகளுக்கு அருள் இறக்கப்பட்டு தாதம்பட்டி, நீரேத் தான், புதூர், ராமநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் வீதி உலா வந்து கோயிலை அடைதல். மாலை 6 மணி முதல் 7 மணி நேரம் வரை விக்னேஸ்வர பூஜை இரண்டாம் நாள் காலை 9 மணி முதல் 12.15 | மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணிவரை பல்வேறு பூஜைகள் செய்து முதல் கால யாகசாலை பூஜை நிறைவு செய்யப்பட்டது. மூன்றாம் நாள் காலை 8.30 மணி முதல் 11மணி வரை இரண்டாம் கால யாக பூஜையும் மாலை 5.30 மணி முதல் 8 மணி வரைமூன்றாம் கால யாக பூஜையும் நடந்தது. நான்காம் நாள் காலை 7 மணிக்கு நான்காம் கால யாக பூஜை செய்யப்பட்டது. இந்த யாகசாலை பூஜையில் தேவார திருமுறை பாராயணம் பாடப்பட்டது.

9 மணிக்கு மகாபூர்ணாகதி, 9.15 கலசங்களுடன் புறப்பாடு நடந்தது. .9.45 மணிக்கு காசி இராமேஸ்வரம் அழகர் கோயில் பாபநாசம் உள்ளிட்ட பல்வேறு புண்ணிய ஸ்தலங்களில் இருந்து எடுத்து வரப்பட்ட புனிதநீர் ஊற்றி

ராஜகோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 10.10 மணிக்கு மூலாலய கும்பாபிஷேகமும், பாப்பம்மாள் நாச்சாரம் மாளுக்கு சிறப்பு மகா அபிஷேக ஆராதனை அர்ச்ச னைகளும் செய்யப்பட்டது.10.30 க்கு சந்தை வளாகத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதன் ஏற்பாடுகளை விஜயரங்கன் உள்ளிட்ட கோயில் திருப்பணி குழுவினர் செய்தனர் யாகசாலை பூஜைகள் திருப்பரங்குன்றம் ராஜா பட்டர் என்ற சந்திரசேகர் பட்டர் சிறப்பு அழைப்பாக கற்பூர பாலசுப்பிரமணியப்பட்டர் செந்தில் பட்டர் ஹாலாஸ்யநாத பட்டர் ஆகியோர் செய்தனர் வாடிப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டனர்.

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு பாதுகாப்பு: தலைமை தேர்தல் அதிகாரியிடம் மனு!




சென்னை, மார்ச். 26–

த.வெ.க.வின் மூத்த நிர்வாகி செங்கோட்டையன் நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கை சந்தித்து மனு ஒன்றை அளித்தார். உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமாரையும் சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளார்.

இதுபற்றி செங்கோட்டையனிடம் கேட்டபோது, த.வெ.க. தலைவர் விஜய் விரைவில் பிரசாரத்தை தொடங்க உள்ளார். இந்த பிரசாரத்திற்கான அனுமதி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உயர் அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளேன் என்று தெரிவித்தார்.



திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் னிஷ் நாரணவரே சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு தியாகி திருப்பூர் குமரன் பேருந்து நிலையம் அருகிலுள்ள உழவர் சந்தையில் காய்கறிகள் மூலம் 100% வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை பார்வையிட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சங்கமித்திரை இணை இயக்குனர் வேளாண்மை எம் ஆதி சாமி துணை இயக்குனர் வேளாண் விற்பனை வணிகம் எஸ்.சண்முகசுந்தரம் வேளாண் விற்பனை சங்க செயலாளர் எஸ் வெங்கடாஜலம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை பி மீனாம்பிகை உள்ளனர்.



# கஜகேசரி யோகம்..! அடுத்த 5 மாதங்களுக்கு இந்த ராசிக்காரர்களை யாராலும் தடுக்க முடியாது..!



குரு பகவான் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே தனது ராசியை மாற்றும். ஆனால் இந்த ஆண்டு, குரு இரண்டு முறை தனது ராசியை மாற்றவுள்ளது. இந்த மாற்றத்தின் காரணமாக, ஜூன் மாதத்தில் குரு 'கஜகேசரி யோகத்தை' உருவாக்கவுள்ளது. ஜோதிட சாஸ்திரத்தில் இந்த யோகம் மிகவும் சுபமானதாகக் கருதப்படுகிறது. இந்த கஜகேசரி யோகம், குறிப்பாக நான்கு ராசிகளைச் சேர்ந்தவர்களுக்குச் சிறப்பான சுப பலன்களை வழங்கவுள்ளது. அந்த ராசிகள் எவை என்று இப்போது பார்ப்போம்.

**ரிஷபம்**

குருவின் இந்த ராசி மாற்றம், ரிஷப ராசிக்காரர்களுக்குப் பல நன்மைகளைக் கொண்டுவரும். குறிப்பாக, இந்த ராசியைச் சேர்ந்த திருமணமாகாதவர்களுக்கு, இக்காலகட்டத்தில் திருமணம் கைகூடும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அத்துடன், தொழில் மற்றும் உத்தியோகத்திலும் நல்ல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பதவி உயர்வுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். பொருளாதார ரீதியாக நீங்கள் ஒரு உயர்ந்த நிலையை அடைவீர்கள். இக்காலகட்டத்தில் உங்கள் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்; ஆளுமைத் திறனும் மேம்படும். தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை ஆகிய இரண்டிலும் அற்புதமான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறியப்படுகிறது.

**மிதுனம்**

மிதுன ராசிக்காரர்களுக்கு கஜகேசரி யோகம் மிகவும் சாதகமாக அமையவுள்ளது. இக்காலகட்டத்தில், மிதுன ராசிக்காரர்களின் அதிர்ஷ்டம் இரட்டிப்பாகும். இந்த காலகட்டத்தில், இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்குப் பதவி உயர்வுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. வருமானமும் இரட்டிப்பாகும்.

இந்த ராசியைச் சேர்ந்தவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். இருப்பினும், இந்த ராசியைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் வர்த்தகத் துறையில் இருப்பவர்கள் இக்காலகட்டத்தில் மிகவும் சிறப்பான சுப பலன்களைப் பெறுவார்கள். இக்காலகட்டத்தில், தங்கள் வருமானத்தை அதிகரிக்க அவர்களுக்குப் பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

கடகம்

'கஜகேசரி யோகம்' உருவாவதன் காரணமாக, கடக ராசியில் பிறந்தவர்கள் இந்த காலக்கட்டத்தில் மிகவும் சிறப்பான சுப பலன்களைப் பெறுவார்கள். குருவின் ராசி மாற்றம், அதன் சொந்த ராசியான கடகத்திலேயே நிகழ்கிறது. அதனால்தான், இந்த கஜகேசரி யோகம் கடக ராசியில் பிறந்தவர்களுக்கு அதிகபட்ச நன்மைகளைக் கொண்டு வருகிறது. இந்த ராசியில் பிறந்தவர்கள் இக்காலகட்டத்தில் மிக அதிக அளவிலான நன்மைகளைப் பெறுவார்கள்.

இந்த காலக்கட்டத்தில், கடக ராசிக்காரர்களின் தன்னம்பிக்கையும் ஈர்ப்பு சக்தியும் கணிசமாக அதிகரிக்கும். மேலும், உங்களுக்குப் புதிய வேலை கிடைப்பதற்கு உதவும் ஒரு சிறப்பான யோகம் அமைய வாய்ப்புள்ளது. வணிகம் மற்றும் வர்த்தகத் துறையில் இருப்பவர்களுக்கு இக்காலகட்டம் மிகவும் சாதகமாக அமையும்.

**தனுசு**

தனுசு ராசியை குரு பகவான் ஆட்சி செய்கிறார். குருவின் பெயர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் இந்த ராசியினருக்கு மிகவும் நற்பயன்களைத் தருவதாக அமையும். இக்காலகட்டத்தில், இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் பெரும் வெற்றிகளை அடைவார்கள். இப்பருவத்தில், தனுசு ராசியைச் சேர்ந்த திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் சார்ந்த நல்ல வாய்ப்புகள் அமையக்கூடும். மேலும், கூட்டாண்மை முறையில் தொழில் செய்துவரும் தனுசு ராசியினர், தங்கள் தொழில் துறையில் பல சுப பலன்களைப் பெறுவார்கள். உங்கள் செல்வமும் சொத்துக்களும் கணிசமாகப் பெருகும்.

# ரூ.1 கோடி பரிசுடன் "உலக இலக்கியத்துக்கான வாழும் தமிழ் விருது'! எழுத்தாளர் ஜெயமோகன் அறிவிப்பு...!




"உலக இலக்கியத்துக்கான வாழும் தமிழ் விருதை' அறிமுகப்படுத்தும் விழா டெல்லியில் மார்ச் 25ம் தேதி அன்று நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்டு தமிழ்நாட்டின் இலக்கிய எழுத்தாளர் ஜெயமோகன் சிறப்புரை ஆற்றினார். அப்போது, இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.



பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று முடிந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நினைவாக, அருள்மிகு பாதவிநாயகர் திருக்கோயில் பின்புறம் உள்ள மங்கம்மாள் மண்டபம் அருகில் கற்சிலா வேல் நிறுவப்பட்டது. அதன் மண்டல பூஜை 48 ஆம் நாள் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இந்த பூஜையில் கோவில் இணைஆணையர் மாரிமுத்து மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### நீங்கள் பல் வலியா? இந்த 4 குறிப்புகளைப் பின்பற்றினால், அது மீண்டும் ஒருபோதும் ஏற்படாது!



ஒருவர் முழுமையாக ஆரோக்கியமாக இருக்க, அவரது உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் சரியாகச் செயல்பட வேண்டும். அவற்றில் ஏதேனும் ஒன்று சரியாகச் செயல்பட வில்லை என்றால், அவர் கடுமையான பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும். நாம் உண்ணும் உணவை மென்மையாக்கி வயிற்றுக்கு அனுப்புவதில் நமது பற்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆனால் தற்போது பலர் இந்தப் பல் பிரச்சனைகளால் அவதிப்படுகின்றனர். உலகில் மக்களை மிகவும் பாதிக்கும் உடல்நலப் பிரச்சனைகளில் இந்தப் பிரச்சனைகளே முதலிடத்தில் உள்ளன. உலகளவில் சுமார் 3.7 பில்லியன் மக்கள் பல் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் பல்வலி அல்லது ஈறுகளில் வீக்கம் ஏற்படும்போது மட்டுமே மருத்துவரிடம் செல்கின்றனர். இருப்பினும், பல் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு முன்பே அவற்றைத் தடுப்பது அல்லது ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதே சிறந்தது என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். இருப்பினும், உங்கள் பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்க இந்த நான்கு கொள்கைகளைப் பின்பற்றுவதே போதுமானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். விலையுயர்ந்த சிகிச்சைகளை விட, அன்றாடப் பழக்கவழக்கங்களில் சிறிய மாற்றங்களைச் செய்வதே பற்களையும் ஈறுகளையும் ஆரோக்கியமாக வைத்திருக்கப் போதுமானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அவை என்னவென்று இப்போது பார்ப்போம்.

உங்கள் பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்க நீங்கள் செய்ய வேண்டியவை இவை.

தினமும் பல் துலக்குதல்: ஒரு நாளைக்கு இரண்டு முறை பல் துலக்குங்கள்.

உணவுப் பழக்கவழக்கங்கள்: சர்க்கரை பானங்கள் மற்றும் தின்பண்டங்களைக் குறைக்கவும். இவை பற்களில் பாக்டீரியாக்கள் வளரக் காரணமாகலாம்.

கெட்ட பழக்கங்களைத் தவிர்க்கவும்: புகையிலை மற்றும் மது அருந்துதல், பற்கள் மற்றும் ஈறுகளுக்கு மட்டுமல்ல, புற்றுநோய் போன்ற கடுமையான நோய்களையும் ஏற்படுத்தும். அவற்றை முற்றிலுமாக கைவிடுவது சிறந்தது.

ஊட்டச்சத்து: அதிக பழங்கள் மற்றும் புதிய காய்கறிகளை உட்கொள்வது பற்களுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.

**நிபுணர் ஆலோசனை**

வாய் ஆரோக்கியமாக இருந்தால், உடல் ஆரோக்கியமாக இருக்கும். உங்கள் பல் பராமரிப்பைப் புறக்கணிக்காதீர்கள். சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் உடனடியாக மருத்துவரை அணுகுவதன் மூலம், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய உடல்நலப் பிரச்சனைகளைத் தடுக்கலாம் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

# “பாகிஸ்தானைப் போல இந்தியா தரகர் நாடு அல்ல..” - வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர்!



புதுடெல்லி, மார்ச். 26–

மேற்காசிய பகுதியில் அமைந்த ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக ஏவுகணைகளை கொண்டு, கடந்த பிப்ரவரி 28–ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. எனினும், நட்பு நாடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் ஈரான் – அமெரிக்கா இடை யே மத்தியஸ்தம் செய்ய முயற்சிக்கும் பாகிஸ்தானை ‘தரகர் நாடு’ என வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் விமர்சனம் செய்துள்ளார்.


இதுதொடர்பாக மத்திய கிழக்குப் போர் குறித்த அனைத்து கட்சிக் கூட்டத்தில் பேசிய அவர், “இந்தியா ஒருபோதும் பாகிஸ்தானைப் போல தரகர் நாடாக செயல்படாது. நமது வெளியுறவுக் கொள்கை தன்னாட்சி உடையது. நாங்கள் யாருக்காகவும் மத்தியஸ்தம் செய்வதில்லை. பாகிஸ்தானுக்கு இடைத்தரகர் வேலை ஒன்றும் புதிதல்ல. 1981 முதலே அமெரிக்கா தனது தேவைகளுக்கு பாகிஸ்தானைப் பயன்படுத்தி வருகிறது” என்று ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பாகிஸ்தான் ஒரு மத்தியஸ்தரின் பங்கை வகிக்கிறது என்றும், இந்தியா ஒரு மவுன சாட்சியாக மாறிவிட்டது என்றும் காங்கிரஸ் தலைவர் தாரிக் அன்வர் விமர்சித்திருந்தார்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங், உள்துறை மந்திரி அமித்ஷா, வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மற்றும் பல மத்திய மந்திரிகள் கலந்து கொண்டனர். இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கலந்துகொள்ளவில்லை, மேலும் திரிணாமூல் காங்கிரசும் (TMC) கூட்ட த்தில் கலந்துகொள்ளவில்லை.

ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இரண்டு மணி நேரக் கூட்டத்தில், மேற்கு ஆசியாவின் நிலைமை மற்றும் நாட்டில் உள்ள எண்ணெய், எரிவாயு இருப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

# ரெயில்களில் நடுப்படுக்கையை எப்போது பயன்படுத்தலாம்..?




சென்னை, மார்ச். 26–

ரெயிகளில் நடுப்படுக்கையை (மிடில் பெர்த்) பயன்படுத்தும் பயணிகளால் பல்வேறு பிரச்சினைகள் ஓடும் ரெயில்களில் நிகழ்ந்து வருகிறது. அதில் தூங்குவதற்கு பயன்படுத்துவதாலேயே அதிக அளவு பிரச்சினை ஏற்படும். இதுபோன்ற பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், பயணிகள் இருக்கை தொடர்பாக ரெயில்வே வாரியம் ஏற்கனவே விதிமுறையை உருவாக்கி இருந்தது. அந்த விதிமுறையில் பயணிகள் படுக்கைகளை எப்போது பயன்படுத்தலாம்? என்பது குறித்து விளக்கப்பட்டு உள்ளது. இதன்படி, முன்பதிவு செய்த ரெயில் பெட்டிகளில் நடுப்படுக்கையை பயன்படுத்தும் பயணிகள் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையில் உறங்கு வதற்கு பயன்படுத்தலாம். குறிப்பிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் சக பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இருக்கை வசதியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விதியில் இருந்து சிலருக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நோயாளிகள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் தூங்க விரும்பினால் டிக்கெட் பரிசோதகரிடம் அனுமதி பெற்றுக்கொள்ள லாம். மேலும், கீழ் இருக்கையில் உள்ள சக பயணியின் ஒப்புதல் அளித்தால் நேர வரம்பை நீட்டித்து கொள்ள லாம். சில பயணிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தூங்க முயலும் போது, பயணிகளுக்கு இடையே பிரச்சினை ஏற்படும். இதுபோன்ற நேரங்களில் டிக்கெட் பரிசோதகர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அவர்கள் இதற்கு தீர்வு அளிப்பார்கள்.

இதேபோல, மேல் படுக்கையில் தூங்குவதற்கு எந்த நேர வரம்பும் கிடையாது. நடுப்படுக்கையை முன்பதிவு செய்தவர்கள் கண்டிப்பாக ரெயில்வே விதிகளை பின்பற்ற வேண்டும். இந்த விதிமுறைகளை முறையாக தெரிந்துகொண்டு பயணிகள் ரெயில் பயணம் மேற்கொள்ள வேண்டும் என தெற்கு ரெயில்வே சார்பில் சமூக வலைதள பக்கத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகளிடையே ஏற்படும் மோதல்களைத் தவிர்க்கவே இந்த விழிப்புணர்வு பதிவு வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இயற்கை எரிவாயு இணைப்பை மறுத்தால் எல்.பி.ஜி. இல்லை- மத்திய அரசு அறிவிப்பு!



புதுடெல்லி, மார்ச். 26–

வளைகுடா பிராந்தியத்தில் நடந்து வரும் போரால் இந்தியாவில் சமையல் கியாஸ் சிலிண்டருக்கு (எல்.பி.ஜி.) தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

எனவே மக்கள் இயற்கை எரிவாயு இணைப்புக்கு (பி.என்.ஜி.) மாற வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. குறிப்பாக பி.என்.ஜி இணைப்பு உள்ள நகரங்களில் உள்ள எல்.பி.ஜி. வாடிக்கையாளர்கள் அதற்கு மாறுமாறு அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

தற்போது இயற்கை எரிவாயு இணைப்பு உள்ள பகுதிகளில் சமையல் கியாஸ் வாடிக்கையாளர்கள் இயற்கை எரிவாயுவுக்கு மாறாவிட்டால், அவர்களது சமையல் கியாஸ் இணைப்பு துண்டிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்து உள்ளது.

இது தொடர்பாக பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில், ‘பி.என்.ஜி இணைப்பு பெற வாய்ப்பு இருந்த போதும், அதை தேர்வு செய்யாத குடும்பங்களுக்கு 3 மாதங்களுக்குப்பிறகு எல்.பி.ஜி. வினியோகம் நிறுத்தப்படும்.

அதேநேரம் பி.என்.ஜி. இணைப்பு பெறுவதில் தொழில்நுட்ப ரீதியாகச் சாத்தியமற்றதாக இருக்கும் பட்சத்தில், தடையில்லாச் சான்றிதழுக்கு உட்பட்டு விநியோகத்தைத் தொடர இந்த விதிமுறை அனுமதிக்கிறது’ என குறிப்பிடப்பட்டு உள்ளது.

# மேற்காசிய நாடுகளில் போர் சூழல்: 4.26 லட்சம் பயணியர் இந்தியா வருகை!



புதுடில்லி, மார்ச். 26–

மேற்காசிய போர் பதற்றத்துக்கு இடையே, ஈரானில் இருந்து 1,043 இந்தியர்கள் உட்பட மொத்தம் 4.26 லட்சம் பயணியர் இந்தியா திரும்பியுள்ளனர். மேற்காசியாவில் நிலவும் போர் சூழல் குறித்து அமைச்சர்கள் இடையே யான விளக்க கூட்டம் நேற்று நடந்தது.

இது குறித்து வளைகுடா நாடுகளுக்கான மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலர் அசீம் மஹாஜன் கூறியதாவது:

கடந்த பிப்ரவரி 28 முதல் இந்தியா மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை சேர்ந்த 2,149 விமானங்கள் அந்த நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இயக்கப்பட்டன. இவ்வாறு மொத்தம் 4.26 லட்சம் பயணியர் இந்தியா திரும்பியுள்ளனர். மேற்காசிய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகளின் நிலவரங்களை கூர்மையாக கண்காணித்து வருகிறோம். அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்ப டுகிறது.

இந்திய ர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு உதவ பிரத்யேக கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது.

ஈரானில் உள்ள இந்தி யர்களை ஆர்மீனியா, அஜர்பைஜான் வழியாக இந்தியா திரும்புவதற்கு தொடர்ந்து உதவுகிறோம். எங்களது தூதரகத்தின் உதவியுடன், 717 மாணவர்கள் மற்றும் 326 மாணவர்கள் அல்லாத நபர்கள் உட்பட, மொத்தம் 1,043 இந்தியர்கள் ஈரானிலிருந்து வெளியேறியுள்ளனர்.

சவுதியின் ரியாத்தில் மார்ச் 18ல் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த இந்தியரின் உடல், நேற்று காலை இந்தியா வந்தடைந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆந்திராவில் தனியார் பஸ் தீப்பிடித்து எரிந்தது: 14 பேர் பலியான சோகம்!



ஆந்திரா, மார்ச். 26–

ஆந்திராவின் மர்க்காபுரம் பகுதியில் தனியார் பஸ் –டிப்பர் லாரி நேருக்கு மோதி விபத்துக்குள்ளாகின. மோதிய வேகத்தில் பஸ் தீ பிடித்து எரிந்தது. அதிகாலை நேரம் என்பதால் பல பயணிகள் தூக்கத்தில் இருந்தனர். இதனால் அவர்களால் உடனடியாக வெளியே வர முடியவில்லை . விபத்து பற்றி தகவல் அறிந்தவுடன் தீயணைப்பு வீரர்கள், போலீசார் விரைந்து வந்து தீயை அணைத்து மீட்பு பணியை மேற்கொண்டனர். இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக 14 பேர் உடல் கருகி பலியாகி உள்ளனர். 25–க்கும் அதிகமானவர்கள் காயங்களுடன் தப்பி உள்ளனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் உயிர் பலி அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்தில் பஸ் முழுவதுமாக தீப்பிடித்து எரிந்தது.

# தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கம் விலை!



சென்னை, மார்ச். 26–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.1,09,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.70 உயர்ந்து ரூ.13,670–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை உயர்ந்த நிலையில் வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய தனியார் நிறுவனம்!



சென்னை, மார்ச். 26–

பெட்ரோல் மற்றும் டீசல் விலையை ‘நயாரா’(தனியார்) பெட்ரோல் நிறுவனம் உயர்த்தியுள்ளது. அதன்படி, பெட்ரோல் விலை லிட்டருக்கு 5 ரூபாய் உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.107.93–க்கும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்ந்து ஒரு லிட்டர் ரூ.97.22–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் மொத்தம் 7,000 நயாரா பெட்ரோல் பங்குகள் செயல்பட்டு வருகின்றன.

கடலூரில் நயாரா பெட்ரோல் விலை ரூ.5.30 உயர்ந்து ஒரு லிட்டர் ரூ.107.93க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்ந்து ஒரு லிட்டர் ரூ.97.22க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது வாகன ஓட்டிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு
## பாபா அணு ஆராய்ச்சி மையம் –105 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: பாபா அணு ஆராய்ச்சி மையம்
அறிவிப்பு எண்: 4/2026(R–V)
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: தற்காலிகம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 105 இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகைப் பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 10.03.2026
கடைசி தேதி: 31.03.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.barc.gov.in/

# சோனியா காந்தி உடல் நிலை எப்படி உள்ளது? மருத்துவமனை அறிக்கை!



புதுடெல்லி, மார்ச். 26–

காங்கிரஸ் மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவருமான சோனியா காந்தி, உடல்நிலை பாதிப்பு காரணமாக புதுடெல்லியில் உள்ள சர் கங்காராம் மருத்துவமனையில் நேற்று முன் தினம் அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் குழு அவருக்கு சிகிச்சை அளித்து வருகிறது.பருவநிலை மாற்றத்தின் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதை சோனியா காந்தி உணர்ந்ததாகவும், அதன் காரணமாக அவர் மருத்துவமனைக்குச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

சோனியா காந்தியின் உடல்நிலையில் கவலைக்குரிய தீவிர பாதிப்புகள் ஏதும் இல்லை என்றும், அவரை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. தொடர்ந்து மூன்றாவது நாளாக, சோனியா காந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவரது உடல் நிலை குறித்து இன்று மருத்துவமனை தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், சோனியா காந்தியின் உடல் நிலை சீராக இருப்பதாகவும் அவருக்கு ஏற்பட்டுள்ள தொற்றுக்கு ஆண்டிபயாட்டிக் மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சோனியா காந்தி தொடர்ந்து மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்” இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் 7 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை!




ராமேஸ்வரம், மார்ச். 26–

ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 7 மீனவர்களை, எல்லை தாண்டி மீன்பிடித்ததாக நெடுந்தீவு அருகே இரண்டு விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படை கைது செய்தது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன் கடற்படை முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கு விசாரணை செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சினிமா துளிகள்..!

# டும்... டும்... டும்... எப்போது?- சாய் பல்லவி பதில்!



தென்னிந்திய சினிமாவின் முன்னணி கதாநாயகியாக ஜொலித்து வரும் சாய் பல்லவி நடிப்பில் கடைசியாக வெளியான ‘அமரன்’ மற்றும் ‘தண்டேல்’ படங்கள் தொடர் வெற்றி பெற்று வசூல் குவித்தது.

தற்போது இந்தியில் ‘ராமாயணம்’ படத்தில் சீதா கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். மேலும் தனுசின் புதிய படத்திலும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சாய் பல்லவியிடம் ‘உங்களுக்கு திருமணம் எப்போது? என்று கேட்கப்பட்டது.

இதற்கு, ‘இப்போதைக்கு திருமணம் இல்லை. கண்டிப்பாக இல்லை. நான் சிங்கிளாகத்தான் இருக்கிறேன்’’ என்று சிரித்தபடி கூறிச்சென்றார் சாய் பல்லவி.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## தி.மு.க. கூட்டணியில் ம.ஜ.க, எஸ்.டி.பி.ஐ, முக்குலத்தோர் புலிப்படை கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு!

சென்னை, மார்ச். 26–
தமிழகச் சட்டமன்றத் தேர்தல் ஏப்.23–ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தி.மு.க தலைமையிலான கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டுப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் மனிதநேய ஜனநாயக கட்சி (ம.ஜ.க), எஸ்.டி.பி.ஐ (SDPI) மற்றும் முக்குலத்தோர் புலிப்படை ஆகிய கட்சிகளு க்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதன்படி, தி.மு.க. கூட்டணியில் ம.ஜ.க, எஸ்.டி.பி.ஐ, முக்குலத்தோர் புலிப்படை கட்சிக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கீடு




**மனிதநேய ஜனநாயக கட்சி (ம.ஜ.க)**

தி.மு.க கூட்டணியில் இணைந்துள்ள ம.ஜ.க–வுக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தலைவர் தமிமுன் அன்சாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், தி.மு.க கூட்டணியில் எங்களுக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் உள்ளிட்ட 5 தொகுதிகள் விருப்பப் பட்டியலாகக் கொடுத்துள்ளோம். நாளை மீண்டும் முதலமைச்சரைச் சந்திக்க உள்ளோம், அப்போது எந்தத் தொகுதி என்பது உறுதி ஆகும். 234 தொகுதிகளுமே எங்கள் தொகுதிகள்தான். இந்த சந்திப்பு மிகுந்த மனநிறைவைத் தருகிறது என்றார். கடந்த 2016 தேர்தலில் அ.தி.முக கூட்டணியில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு நாகை தொகுதியில் தமிமுன் அன்சாரி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

**முக்குலத்தோர் புலிப்படை**

நடிகர் கருணாஸ் தலைமையிலான முக்குலத்தோர் புலிப்படை கட்சிக்கும் 1 தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்சியும் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருணாஸ் பேசுகையில், நான் விருப்பப்பட்டுதான் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறேன். அ.தி.மு.க கூட்டணியில்தான் கூட்டணிக் கட்சிகளை இரட்டை இலையில் நிற்கச் சொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள். ஜி.கே. வாசன் ஏன் தாமரை சின்னத்தில் நிற்கிறார்? ஆனால், தி.மு.க கூட்டணியில் என்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்.

**எஸ்.டி.பி.ஐ**


எஸ்.டி.பி.ஐ கட்சியின் தேசியத் துணைத்தலைவர் தெகலான் பாகவி கூறுகையில், தி.மு.க கூட்டணியில் ஒரு தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும், அந்தத் தொகுதி எது என்பது இன்று இறுதியாகும் என்றும் தெரிவித்தார்.

தி.மு.க கூட்டணியில் ஏற்கனவே காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், தே.மு.தி.க, ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, ம.ம.க உள்ளிட்ட கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது எஞ்சியுள்ள சிறிய கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டு வருவதால், கூட்டணி உடன்பாடுகள் முழுமையடைந்து வருகின்றன.

## திமுக, அதிமுக, தவெக - யாருக்கு வெற்றி? லட்சக்கணக்கில் Betting நடக்குது.. ஷாக் தகவல்..!!

சென்னை, மார்ச். 26–
தமிழ்நாடு அரசியல் களம் சூடுபிடித்திருக்கும் வேளையில், அனைத்து கட்சிகளும் கூட்டணி, தொகுதி ஒதுக்கீடு குறித்த முடிவுகளை இறுதி செய்திருக்கும் நிலையில் விரைவில் தேர்தல் பிரச்சாரத்தைத் துவங்க உள்ளது.

இந்த நிலையில் சுவாரஸ்யமான விஷயம் கிரிப்டோ சந்தையில் நடத்து வருகிறது. ஐபிஎல் போட்டியின் போது எப்படி எந்த அணி வெற்றி பெறும் என பல்வேறு தளத்தில் பெட்டிங் செய்யப்பட்டு விளையாடப்படுகிறதோ, இதேபோல் உலகளவில் இயங்கும் PolyMar–




ket என்ற ஒரு தளத்தில் அரசியல், போர், பொருளாதாரம், விளையாட்டு தொடர்பான விஷயங்கள் மீது பந்தயம் கட்டும் விஷயம் நடந்து வருகிறது.

உதாரணமாக டிரம்ப் வெனிசுலா–வை தாக்கும் போதும் சரி, கிரீன்லாந்து கைப்பற்றும் போதும் சரி, பெடரல் வங்கி வட்டி விகித குறைக்கும் போதும் சரி பல்வேறு கேள்விகளை ஊகம் அடிப்படையில் பந்தியம் கட்டப்பட்டது.. இவ்வளவு ஏன் சிஎஸ்கே – ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு மத்தியிலான விளையாட்டுப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதில் கூட தற்போது பெட்டிங் நடக்கிறது. இப்படி 2026 தமிழகச் சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சி வெற்றி பெறும் என்பது குறித்து தற்போது பெட்டிங் மிகவும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் பங்குபெறும் பெரும்பாலான மக்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இதுவரையில் வெளியான கணிப்புகளை ஒப்பிடும் போது பாலிமார்கெட் தளத்தில் நடக்கும் பெட்டிங்கில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

பாலிமார்க்கெட் என்பது உலகின் மிகப் பிரபலமான டிஜிட்டல் ப்ரெடிக்ஷன் மார்க்கெட் (Prediction Market). இது அமெரிக்க டாலருக்கு பதிலாக USDC எனும் ஸ்டேபிள் காயினைப் பயன்படுத்தி பிளாக்செயின் தொழில்நுட்பத்தின் வாயிலாக கிரிப்டோகரன்சி வாயிலாக இயங்குகிறது.

இத்தளத்தில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலின் வெற்றியாளர் யார் என்ற கேள்விக்கு பந்தையம் வைக்கப்பட்டு வர்த்தகம் நடந்து வருகிறது. இந்த கேள்விக்கான பெட்டிங் ஆப்ஷன் பட்டியலில் திமுக, அதிமுக, தவெக, தேமுதிக, காங்கிரஸ், பிஜேபி உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் பட்டியலிடப்பட்டு உள்ளது. டிசம்பர் 24 ஆம் தேதி துவங்கிய இந்த பெட்டிங் ஏப்ரல் 23ஆம் தேதி அதாவது தேர்தல் நடக்கும் நாள் வரையில் பெட்டிங் நடக்கும். இன்று ஒரு நாள் மட்டும் சுமார் 1,52,420 டாலர் மதிப்பிலான தொகைக்கு வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது. பங்குகள் எப்படி வாங்கி விற்கப்படுகிறதோ, அதேபோல் தான் பாலிமார்கெட் தளத்திலும் வர்த்தகம் நடக்கிறது. இதில் உண்மையாகவே பணம் வைத்து பெட்டிங் செய்யப்படும் காரணத்தால் மிகவும் மக்களின் உண்மையான எண்ணத்தைப் பிரதிபலிக்கும் விஷயமாகப் பார்க்கப்படுகிறது.

தற்போதைய பெட்டிங் நிலவரத்தின் படி DMK – சுமார் 80% வெற்றி வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. ADMK (AIADMK) – சுமார் 14% TVK (விஜய் கட்சி) – சுமார் 6% INC – 1% க்கும் குறைவாக BJP – INC – 1% க்கும் குறைவாக வெற்றி வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. தற்போது சந்தை பங்கேற்பாளர்கள் பெரும்பாலும் DMK தான் அதிக இடங்களை வெல்லும் என நம்புகின்றனர். மேலும் இது தேர்தல் கமிஷன் அல்லது அதிகாரப்பூர்வ சர்வே அல்ல என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.


Polymarket என்பது முழுக்க முழுக்க ஊக அடிப்படையில் நடக்கும் ஒரு வர்த்தகம். இதில் முக்கியமாக Kii0nX என்ற நபர் திமுக மற்றும் தவெக வெற்றி பெறும் என இரண்டு கட்சியின் மீதும் பெட்டிங் செய்துள்ளார். இதேபோல் திமுக வெற்றி பெறும் என சுமார் 3831 பங்குகளை வாங்கி குவித்துள்ளார். திமுக கட்சி மீது சுமார் 1,664.74 டாலர் பெட்டிங் செய்த இவருக்கு திமுக வெற்றி பெறும் பட்சத்தில் 3,045.71 டாலர் கிடைக்கும். இதேபோல் தவெக கட்சி–யின் மீது இவர் பெட்டிங் செய்துள்ள 15.66 டாலருக்கு தவெகா வெற்றிபெற்றால் 84.64 டாலர் கிடைக்கும். சுமார் 22.71 சதவீத லாபம். இதுவே திமுக வெற்றி பெற்றால் 120.55 சதவீதம் லாபம் கிடைக்கும்.

Decent–Abacus–Advocate என்ற நபர் தவெக கட்சி வெற்றி பெறும் என 5445 பங்குகளை வாங்கியுள்ளார்.

ஆனால் தற்போதைய நிலவரத்தின் படி தவெக 6 சதவீத வெற்றி வாய்ப்புகளை மட்டுமே பெற்றுள்ளதால் இவரின் முதலீடு 81 சதவீத இழப்பில் உள்ளது.

1351.26 டாலர் முதலீடு செய்து 307.62 டாலர் பெற உள்ளார். இது மக்கள் தங்களது பணத்தை பெட்டிங் செய்து யார் வெல்வார்கள் என்று தேர்வு செய்கிறார்கள், அதன்படி உருவாகும் probability தான் இந்த சதவீதம். இது crowd sentiment + money–backed opinion ஆகும்.

## என்னடா இது.. த.மா.கா.வுக்கு வந்த சோதனை: எதிர்த்து நிற்கும் 5 பேர் யார் தெரியுமா?





சென்னை, மார்ச். 26–
நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், கடந்த முறையைவிட கூடுதல் தொகுதிகள் கேட்டார். ஆனால், அனைத்து தொகுதிகளிலும் தோல்வி அடைந்ததை காரணம் காட்டி, இந்த முறை 5 தொகுதிகளே த.மா.கா.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஈரோடு மேற்கு, ராணிப்பேட்டை, ஒட்டன்சத்திரம், கும்பகோணம், கிள்ளியூர் ஆகியவை ஆகும். ஆனால், த.மா.கா. வேட்பாளர்கள், அந்த 5 தொகுதிகளிலும் எதிர்த்து நிற்க வேண்டிய வேட்பாளர்கள் யார் என்று பார்த்தால்தான் பிரமிப்பாக இருக்கிறது. 3 பேர் அமைச்சர்களாக உள்ளனர். மற்ற 2 பேரும் தொகுதிகளில் செல்வாக்கு மிகுந்தவர்கள்.

தற்போது, ஈரோடு மேற்கு தொகுதியில் அமைச்சர் முத்துசாமியும், ராணிப்பேட்டையில் அமைச்சர் காந்தியும், ஒட்டன்சத்திரத்தில் அமைச்சர் சக்கரபாணியும், கும்பகோணத்தில் சாக்கோட்டை அன்பழகனும், கிள்ளியூரில் சட்டமன்ற காங்கிரஸ் குழுத் தலைவர் ராஜேஷ்குமாரும் எம்.எல்.ஏ.வாக உள்ளனர்.

இந்த 5 பேரையும் எதிர்த்து நிற்பது என்பது த.மா.கா.வுக்கு சவாலானதாகும். அ.தி.மு.க. தேர்தல் வரலாற்றில் ஒரு முறை கூட கிள்ளியூர் தொகுதியில் வெற்றி பெற்றது இல்லை. அதேபோல், கடந்த 5 தேர்தல்களிலும் ஒட்டன்சத்திரத்தில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது இல்லை. ராணிப்பேட்டையிலும் கடந்த 10 ஆண்டுகளாக தி.மு.க.தான் வெற்றி பெற்றுள்ளது. கும்பகோணம் தொகுதியிலும் 30 ஆண்டுகளாக தி.மு.க.வே வெற்றி பெற்று வந்துள்ளது.

இப்படி, கடும் சவால் நிறைந்த தொகுதிகளே த.மா.கா.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கட்சி சார்பில் யார் வேட்பாளர்களாக களம் இறக்கப்பட்டாலும் அவர்களுக்கு அக்னிபரீட்சை காத்திருக்கிறது. இது, த.மா.கா.வினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தினாலும், அ.தி.மு.க.வினருக்கும் கட்சி தலைமை மீது கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற தொகுதிகளில் அ.தி.மு.க.வே களம் இறங்கினால்தான், தி.மு.க.வுக்கு நெருக்கடி கொடுக்க முடியும். இப்போது, நாமே தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பை எளிதாக்கிவிட்டதாக குற்றம்சாட்டுகின்றனர்.

## சென்னையில் மார்ச். 27–ல் விஜய் பிரசாரம்: 5 தொகுதிகளுக்கு செல்ல திட்டம்!



சென்னை, மார்ச். 26–
தேர்தல் நெருங்கும் நிலையில் விஜய் எப்போது பிரசாரத்தை தொடங்குவார் என்ற எதிர்பார்ப்பு அக்கட்சியினர் மத்தியில் நிலவும் நிலையில், நாளை மறுநாள் (28ஆம் தேதி) விஜய் பிரசாரம் தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், அண்ணாநகர், விருகம்பாக்கம் ஆகிய தொகுதிகளில் விஜய் பிரசாரம் செய்ய உள்ளார். ஒவ்வொரு இடத்திலும் 3 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள் என தவெக சார்பில் அனுமதி கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. 12 தொகுதிகளில் விஜய் பிரசாரம் செய்ய அனுமதி கோரப்பட்ட நிலையில், தேர்தல் ஆணையம் அனுமதி மறுத்ததாக கூறப்படுகிறது.

## உதயமாகிறது 'புதிய கட்சி' – டாக்டர் ராமதாஸ் அதிரடி முடிவு!



விழுப்புரம், மார்ச். 26–
ராமதாஸ் தலைமையிலான பா.ம.க.வின் தலைமை நிலைய செயலாளரான அன்பழகன் என்பவரின் மகன் முகிலன் தேர்தல் ஆணையத்தில் 'அய்யா பாசறை மக்கள் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்க விண்ணப்பம் அளித்துள்ளார். இந்த கட்சி பெயரின் சுருக்கம் அய்யா பா.ம.க. ஆகும். புதிய கட்சி தொடங்க உள்ளது குறித்து திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் டாக்டர் ராமதாஸ் இன்று (வியாழக்கிழமை) அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார் என கூறப்படுகிறது.

## சென்னையில் 3 பெண் வேட்பாளர்களை களமிறக்கும் அதிமுக...?

சென்னை, மார்ச். 26–
சென்னையில் திருவிக நகர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் ஆகிய 3 தொகுதிகளில் பெண் வேட்பாளர்களை களமிறக்க அதிமுக திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆயிரம் விளக்கு தொகுதியில் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி, அண்ணா நகர் தொகுதியில் கோகுல இந்திரா போட்டியிட உள்ளதாகவும், திருவிக நகரில் ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடி களமிறங்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.




## 14 அமைச்சர்களுடன் மோதுவதை தவிர்த்த அ.தி.மு.க.!




சென்னை, மார்ச், 26–
அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகள் என்ற பட்டியலை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

அதன்படி, 14 தொகுதிகளில் தி.மு.க. அமைச்சர்களை எதிர்த்து போட்டியிடுவதை அ.தி.மு.க. தவிர்த்துள்ளது. அதாவது, அமைச்சர்கள் போட்டியிடும் 14 தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கியுள்ளது. அந்த வகையில், அமைச்சர்கள் எ.வ.வேலு (திருவண்ணாமலை), பெரிய கருப்பன் (திருப்பத்தூர்), மனோ தங்கராஜ் (பத்மநாபபுரம்), நாசர் (ஆவடி), அனிதா ராதாகிருஷ்ணன் (திருச்செந்தூர்), மதிவேந்தன் (ராசிபுரம்) ஆகியோர் தற்போது எம்.எல்.ஏ.வாக இருக்கும் தொகுதிகள் பா.ஜ. க.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், அமைச்சர்கள் கே.என்.நேரு (திருச்சி மேற்கு), டி.ஆர்.பி.ராஜா (மன்னார்குடி), மா.சுப்பிரமணியன் (சைதாப்பேட்டை) ஆகியோர் எம்.எல்.ஏ.வாக உள்ள தொகுதிகள் அ.ம.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சர்கள் அர.சக்கரபாணி (ஒட்டன்சத்திரம்), முத்துசாமி (ஈரோடு மேற்கு), ஆர்.காந்தி (ராணிப்பேட்டை) ஆகியோர் எம்.எல்.ஏ.வாக உள்ள தொகுதிகள் த.மா.கா.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், அமைச்சர் ராஜேந்திரன் எம்.எல்.ஏ.வாக உள்ள சேலம் வடக்கு தொகுதி பா.ம.க.வும், அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் எம்.எல்.ஏ.வாக உள்ள குன்னம் தொகுதி இந்திய ஜனநாயக கட்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மார்ச் 28-ந்தேதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதல்கட்ட பயிற்சி!




சென்னை, மார்ச். 26–
சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 28–ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்டத் தேர்தல் அலுவலரும், சென்னை மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட அறிக்கையில், தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் ஏப்.23–ம் தேதி நடைபெற உள்ளது. சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 978 இடங்களில் மொத்தம் 4,079 வாக்குச்சாவடிகள் உள்ளன. வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள 19,594 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 16 மையங்களில் மார்ச் 28–ம் தேதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

பெரம்பூர் தொகுதிக்கு வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியிலும், கொளத்தூர் தொகுதிக்கு பந்தர் கார்டன் சென்னை உயர்நிலைப் பள்ளியிலும், ராயபுரம் தொகுதிக்கு மேற்கு மாதா சர்ச் சாலையில் உள்ள புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளியிலும் பயிற்சி வகுப்பு நடைபெறும். அனைத்து தொகுதிகளின் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கான ஆணைகள் நேரடியாகவும், குறுஞ்செய்தி வாயிலாகவும் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி வகுப்பில் அவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். இதில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி, நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.


## தி.மு.க. கூட்டணியில் இணைந்த உடனேயே தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகள் ஏன்..?




சென்னை, மார்ச். 26–
கடந்த காலங்களில் தே.மு.தி.க.வுக்கு செல்வாக்கு இருந்துள்ளது. 2011 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த தே.மு.தி.க., 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 இடங்களில் வெற்றி பெற்றது. இதில், பெரும்பாலான தொகுதிகள் வன்னியர்கள் நிறைந்த வடமாவட்டங்கள் ஆகும். எனவே, அந்த ஓட்டுகள் இப்போதும் தே.மு.தி.க.வுக்கு அப்படியே கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், விஜய்காந்தின் மறைவுக்கு பிறகு நடைபெறும் முதல் தேர்தல் என்பதால், அனுதாப ஓட்டுக்களை கொண்டுவரும் என்று தி.மு.க. தலைமை நம்புகிறது.

அதேபோல், விஜயகாந்த் மனைவி பிரேமலதா நாயுடு சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால், மதுரை, தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அச்சமுதாய வாக்குகள் கிடைக்கும் என்றும் தி.மு.க. தலைமை நினைக்கிறது. இப்படி, ஒரே கட்சி மூலம் 2 சமுதாய வாக்குகளை பெற முடியும் என்று தி.மு.க. தலைமை நினைத்ததாலேயே தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகளை அள்ளிக்கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், எங்களை விட வாக்கு சதவீதத்தில் குறைவாக உள்ள தே.மு.தி.க.வுக்கு இவ்வளவு தொகுதிகளா என்றும் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மனக்குமுறலில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

## கடைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வந்த தங்க நகைகள் பறிமுதல்!



புதுச்சேரி, மார்ச். 26–
புதுச்சேரி பெரியகடை போலீஸ்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்ஸ்பெக்டர் ஜெய்சங்கர், சப்–இன்ஸ்பெக்டர் முருகன் மற்றும் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேரு வீதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது நெல்லுமண்டி சந்து பகுதியில் பையுடன் நின்ற வடமாநில வாலிபரை பிடித்து விசாரணை நடத்தினர். இதில் அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். இதையடுத்து அவர் வைத்திருந்த பையை வாங்கி சோதனை நடத்தினர். அதில் தங்க செயின், கம்மல், வளையல் உள்ளிட்ட நகைகள் இருந்தன.

இது குறித்து அவரிடம் விசாரித்தபோது சென்னையில் இருந்து தங்க நகைகளை வாங்கி புதுச்சேரி நகைக்கடைகளில் விற்பனை செய்ய கொண்டு வந்துள்ளதாகவும் மேலும் நகைக்கடைகளில் மாடல்களை காண்பித்து ஆர்டர் எடுக்க வந்ததாகவும் கூறினார். நகைகளை அவரிடம் கொடுத்து அனுப்பியதற்கான ஆவணமும் இருந்தது. ஆனால் விற்பனை ரசீது இல்லை. இதையடுத்து போலீசார் அந்த நகைகளை பறிமுதல் செய்தனர். அந்த நகைகள் 2 கிலோவுக்கு மேல் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ரூ.2 ¾ கோடியாகும். அந்த நகைகளை போலீசார் ராஜ்பவன் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020